

சிவகங்கை மாவட்டம் குமார பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் கல்விப் பணியினை பாராட்டி குழந்தைகள் தினத்தன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளி தலைமை ஆசிரியை திருமதி செல்வமலரிடம் கேடயம் – சான்றிதழை வழங்கி பாராட்டினார். உடன் வட்டார கல்வி அலுவலர் பாலாமணி உட்பட கல்வித்துறை அதிகாரிகள் உள்ளார்கள்.

# தமிழகத்தில் கனமழை பள்ளிகளுக்கு விடுமுறை!

சென்னை, நவ. 21–

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. தென்தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இந்நிலையில் கனமழை காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் 2வது நாளாக பள்ளிகளுக்கு மட்டும் நேற்று விடுமுறை அறிவித்து அம்மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவிட்டுள்ளார். கனமழை எதிரொலியாக நெல்லையில் நேற்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவித்து அம்மாவட்ட கலெக்டர் கார்த்திகேயன் உத்தரவிட்டுள்ளார்.கனமழை எதிரொலியாக தென்காசியில் நேற்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவித்து அம்மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் உத்தரவிட்டுள்ளார்.

கன்னியாகுமரி : பேச்சிப்பாறை பகுதிகளை சுற்றியுள்ள பள்ளிகளுக்கு மட்டும் நேற்று விடுமுறை அளித்து மாவட்ட கல்வி அலுவலர் உத்தரவிட்டுள்ளார். விருதுநகரில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிப்பது குறித்து தலைமை ஆசிரியர்களே முடிவெடுக்கலாம் என்று அம்மாவட்ட கலெக்டர் அறிவித்துள்ளார்.

தொடர் மழை காரணமாக நாகை மாவட்டத்தில் நேற்று பள்ளிகளுக்கு விடுமுறை அளிப்பது குறித்து அந்தந்த பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் முடிவெடுக்கலாம் என்று மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவித்துள்ளார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மாநகர் மாவட்ட செயலாளர்–கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆலோசனையின் படி மதுரை தெற்கு தொகுதி நெல்பேட்டை பகுதி வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி செயலாளர் அ.அன்வர் உசேன் தலைமையில், மாவட்ட பொருளாளர் முருகவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் அபுதாகிர், அருண்குமார், வட்டச் செயலாளர் ரஞ்சித் குமார், சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் உஸ்மான் அலி ஆகியோர் முன்னிலையில் தொகுதி பொறுப்பாளர், கழக மாநில தீர்மானக் குழு இணை செயலாளர் ஜெயக்குமார் சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மதிச்சியம் ரமேஷ், பிஸ்மி, ரமேஷ்பாபு, மோகன், மாரியப்பன், மாணிக்கம், நாகபரத், எஸ்.வி.குருசாமி, லோகமணி ரஞ்சித் குமார் மற்றும் திரளான பாக முகவர்கள் பங்கேற்றனர்.

## அரசு ஆளுகையில் மின்னணு வாயிலாக நிர்வாகத்தினை ஊக்குவிப்பதற்கான

# “பிளாக்செயின் தொழில்நுட்ப பயிலரங்கம்!”

## தமிழ்நாடு மாநில திட்டக் குழு நடத்தியது!

சென்னை, நவ. 21 -

சென்னை, தமிழ்நாடு, நவம்பர் 19, 2024 “பிளாக்செயின் தொழில்நுட்பம்” தமிழ்நாட்டின் டிஜிட்டல் வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகத்தை மாற்றியமைத்தல்” என்ற தலைப்பில் தமிழ்நாடு மாநில திட்டக் குழு, ஆளுகைக்கான புத்தாக்க மையம் (CIG), தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க இயக்கம் (StartupTN), தமிழ்நாடு தொழில் நுட்ப புத்தாக்க மையம் (iTNT Hub), மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் தேசிய சங்கம் (NASSCOM) மற்றும் பிளாக்செயின் & வெப் 3 அசோசியேஷன் (BWA) ஆகியவற்று டன் இணைந்து இந்த பயிலரங்கம் நடத்தப்பட்டது.




இப்பயிலரங்கை, தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். “பிளாக்செயின் தொழில்நுட்பம் அரசு நிர்வாகத்தில் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கும் எனவும், நிதி சேவை கள் மற்றும் அதன் வழங்கல் நடைமுறைகளில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என தெரிவித்தார். மேலும், தமிழ்நாட்டில் புதுமை மற்றும் மின்னணு (டிஜிட்டல்) வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு பிளாக்செயின் தொழில்நுட்பக் கொள்கை போன்ற முன்னோக்கு கொள்கைகள் தொடர்பாகவும் அவர் விவரித்தார்.

அமைச்சர் அவர்களின் உரையைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள் தொடக்க உரையை நிகழ்த்தினார். மாநிலத்தின் நீண்டகால பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசின் நல்ஆளுகைக்காக பிளாக்செயின் தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடர்பான தொலைநோக்கு பார்வையை எடுத்துரைத்தார்.

தொடக்க அமர்வில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், மருத்துவர் எழிலன் நாகநாதன், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில திட்டக் குழுவின் உறுப்பினர், திருமதி சுதா, எஸ், மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

துறைசார் வல்லுநர்கள் மற்றும் பிளாக்செயின் தொழில்நுட்ப நிபுணர்களைக் கொண்ட தொடர் அமர்வுகள் மற்றும் விவாதங்களு டன் பயிலரங்கம் நடைபெற்றது.

இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திருமதி சுனிதா வர்மா அவர்கள், பிளாக்செயின் தொழில்நுட்ப கொள்கை மற்றும் ஒழுங்குமுறையை வழிநடத்துவது குறித்து காணொளி வாயிலாக சிறப்புரையாற்றி னார். புதுமைகளை ஊக்குவிக்கும் வகையில் பிளாக்செயின் கொள்கை குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குதல் குறித்தும் விவரித்தார்.

பிளாக்செயின் தொழில்நுட்பம் மற்றும் அதன் பயன்பாடுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு தொழில்நுட்ப அமர்வுகள் மற்றும் விவாதங்கள் இப்பயிலரங்கில் இடம் பெற்றன. மேலும், இப்பயிலரங்கில் பிளாக்செயின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிதி சேவைகள் அதன் வழங்கல் மற்றும் பொது துறை வழங்கலில் பயன்படுத்துதல் குறித்த ஆழ்ந்த புரிதலை வழங்கியது.

அடுத்தடுத்த அமர்வுகளில், இந்தியாவில் பிளாக்செயின் தொழில்நுட்பம் ஒழுங்குமுறைகள் மூலம் புத்தாக்க மேம்பாடு, அதன் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும், பொதுத் துறை நிறுவனங்களில் பிளாக்செயின் தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்த சாத்திய கூறுகள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொது சேவை வழங்கலின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டன. மேலும், புதிய நிறுவனங்கள், தொழில் துறை மற்றும் கல்வி நிறுவனங்களில் பிளாக் செயின் தொழில்நுட்பத்தை பயன்படுத்த உகந்த சூழல் குறித்தும், இத்தொழில்நுட்ப பயன்பாட்டின் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் தொடர்பாக நிபுணர் குழு விவாதங்கள் நடைப்பெற்றன.

பிளாக் செயின் தொழில்நுட்பத்தை அமல்படுத்துதல், இத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சி, அரசின் முன்னுரிமைகள், தொழில்துறை உட்கட்டமைப்பில் உள்ள சவால்கள் மற்றும் அதனை நெறிமுறை படுத்துதல் உள்ளடக்கிய தொலைநோக்கு கொள்கை தொடர்பாக விவாதித்தனர்.

இப்பயிலரங்கம் தமிழ்நாடு அரசு அதிகாரிகள், முன்னனி தொழில் துறையினர் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்காளர்கள் இணைந்து பிளாக்செயின் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கும் வழிமுறையை ஏற்படுத்தும் தளமாக செயல்பட்டது. இவ்விணைந்த முயற்சிகளின் மூலம் தமிழ்நாடு பிளாக்செ யின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சி மற்றும் நல் ஆளுமை நடைமுறைகள் ஆகியவற்றில் முன்னனி மாநிலமாக வளர்ச்சியடையும்.

## ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட முன்னாள் செயலாளர் –

# முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் நினைவு நாள் நிகழ்ச்சி!

## சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம்,நவ.21-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும், முன்னாள் வேளாண்துறை அமைச்சரும், ‘சேலத்தின் சிற்பி’ என முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களாலும் சேலத்து சிங்கம் என அன்புடன் மக்களாலும் தோழர்களாலும் போற்றப்பட்டவருமானவீரபாண்டியார் அவர்களின் 12ம் ஆண்டு நினைவு நாள் வருகின்ற 23.11.2024 சனிக்கிழமை அனுசரிக்கப்படுகிறது. அதனையொட்டி அன்று காலை 8 மணி அளவில்



பூலாவரி கிளைக்கழக அலுவலகத்திலிருந்து எனது தலைமையில் மவுன ஊர்வலம் புறப்பட்டு அண்ணாரின் நினைவிடத்தை அடைந்து அங்கே மலரஞ்சலி செலுத்தப்படும். இந்நேரத்தில் திரு. வீரபாண்டியார் இறப்பதற்கு 9 ஆண்டுகளுக்கு முன்னாள் அவர் இறந்த அதே நவம்பர் 23ல் கழகத் தலைவர் கலைஞர் அவர்களையும் ஆருயிர் தளபதியார் அவர்களையும், பல இலட்சம் தொண்டர்களையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்த, தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலியார் அவர்களின் திருவுருப்படத்திற்கும் பூலாவரி அலுவலகத்தில் அஞ்சலி செலுத்தப்படும். இந்நிகழ்வில் கழகத்தின் அனைத்து நிர்வாகிகளும், தொண்டர்களும், மறைந்த தலைவர்கள் மீது பற்றும், பாசமும் கொண்ட பொது மக்களும் திரளாகப் பங்கேற்று பெருமை சேர்த்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நெல்லை சந்திப்பு ம.தி.தா.இந்து கல்லூரி மேல்நிலைப்பள்ளி மாணவ,மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்வு கல்வி சங்கத் தலைவர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் பங்கேற்று மாணவ, மாணவியர் கள் உள்பட 190 பேருக்கு அரசு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.நிகழ்வில் துணை மேயர் ராஜ், தச்சை மண்டல தலைவர் ரேவதி பிரபு, கல்வி சங்க பொருளாளர் ஏ.எல்.எஸ். சண்முகம், தலைமை ஆசிரியர் (பொ)சோமசுந்தரம் உள்பட பலர் உள்ளனர்.

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

### கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்ட மற்றும் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம்

ஆதி திராவிடர்நல குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்ட மற்றும் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் வருகிற 26-11-2024 செவ்வாய்கிழமை, காலை 9.30 மணி அளவில் வால்பாறை, துளசியம்மாள் திருமண மண்டபத்தில், எனது தலைமையிலும் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைத் தலைவர் மாண்புமிகு மா.மதிவேந்தன் அவர்கள் முன்னிலையிலும் கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ், எம்.பி., மின்துறை மற்றும் மதுவிலக்கு, ஆய்வத்தீர்வை துறை அமைச்சரும், கரூர் மாவட்டச் செயலாளருமான மாண்புமிகு வி.செந்தில்பாலாஜி மாண்புமிகு செய்தித் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது. ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் மருதூர் ஏ. ராமலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ.. செ.புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி. இராசன், முன்னாள் எம்.எல்.ஏ., திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்கள் பி.துரைசாமி, முன்னாள் எம்.எல்.ஏ., மு. பொன்தோஸ், மு. பரமானந்தம், சி. தசரதன், அரூர் சா. இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி, முன்னாள் எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தின் நிறைவில் நண்பகல் 12.00 மணி அளவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்ட மற்றும் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.
நாள் : 19- 11- 2024.


**ஆ. கிருஷ்ணசாமி**, எம்.எல்.ஏ.,
செயலாளர் - தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு



உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நெல்லை மாநகராட்சி மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய மாநகராட்சி அலுவலர்கள்,பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கான சர்க்கரை நோய் கண்டறிதல் மற்றும் கண்விழித்திரை பரிசோதனை முகாமை நெல்லை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.உடன் மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ. சுகபுத்ரா,துணை மேயர் கே.ஆர். ராஜு பகுதி துணைச் செயலாளர் அப்துல் சுபஹானி,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி,வட்டப் பிரதிநிதி சேக்பிள்ளை உட்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கத்திவாக்கம் மிசா இ.வீரராகவன்
### நவம்பர் 21 (2010)



**கத்திவாக்கம் பகுதியில் 1959ஆம் ஆண்டு கழகக் கிளையைத் துவக்கி, முதல் கிளைச் செயலாளர் என்ற பெருமையும் பின்னர் நகரக் கழகச் செயலாளராக 35 ஆண்டு காலம் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர். தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினராகவும், கத்திவாக்கம் நகராட்சியின் முதல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசமும் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு 27 முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**